**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>**

**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>**

MCOP.No: 228/2024 நாள் 09.07.2026

**ம.சா.1, திருமதி.முத்துலட்சுமி**

**மா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

விபத்து பற்றி எனக்கு தங்கராஜ் என்பவர் சொன்னார். என் கணவர் தளவாய்புரம் ஸ்ரீகிருஷ்ணா நெல் அரவை மில்லில் ஆப்பரேட்டராக வேலை பார்தது மாதம் ரூ.20 ஆயிரம் வரை சம்பாத்தியம் செய்துவந்தார் என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் மசாஆ.10 யை தாக்கல் செய்துள்ளேன். கடந்த 05.05.2024 அன்று காலை 7.30 மணியளவில் எனது கணவரை, தங்கராஜ் என்பவர் அவரது இருசக்கர வாகனத்தில் என் வீட்டிற்கு கொண்டுவந்துவிட அழைத்து வந்தார். என் கணவர் அந்த இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே இறங்கி வீட்டிற்கு வருவதற்காக சாலையை குறுக்கே கடந்த போது அவர் தான் மேற்படி சாலையில் பேருந்து வருவதை கவனிக்காமல் விபத்தை அவராகவே ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இந்த எதிர்மனுதாரரின் பேருந்து ஓட்டுநர் மீது தவறு எதுவும் இல்லை என்றும் இந்த வாகன விபத்திற்கு இறப்புக்கு என்னுடைய கணவரின் தனிப்பட்ட அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு தான காரணம் என்றால் அது சரியல்ல. என் கணவருக்கு விபத்து சமயத்தில் வயது 60 என்பதால் அவர் வயோதிகத்தின் காரணமாக தான் இறந்துபோனர் என்றும் இந்த வாகன விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் அவர் இறந்துபோகவில்லை என்று சொன்னால் அது சரியல்ல நானும் மற்ற மனுதாரர்களும் என் கணவரின் வருமானமத்தை நம்பி இல்லை என்று சொன்னால் அது சரியல்ல . நாங்கள் கோரியுள்ள விபத்து நஷ்ட ஈடு தொகை அதிகமானது என்றும் இந்த வாகன விபத்தானது எதிர்மனுதாரரின் பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவாகவோ அஜாக்கிரதையாகவோ அதிவேகமாகவோ ஏற்படவில்லை என்றால் அது சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவானதை தள்ளுபடி செய்யய்படவேண்டும் என்றும் எங்களுக்கு நாங்கள் கோரியபடி விபத்து இழப்பீடு தொகை கிடைக்க பெறாது என்றால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 09thday of July 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.